**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண்.76** **நாள். 10.06.2019**

# பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மொத்த திடக்கழிவு உற்பத்தியாளர்கள் தங்கள் இடங்களில் சேகரமாகும் திடக்கழிவுகளை தாங்களே வகை பிரித்து கையாள வேண்டும் என தேசிய பசுமை தீர்பாய மாநில கண்காணிப்புகுழு தலைவர் மாண்புமிகு நீதியரசர் பி.ஜோதிமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

= = = = =

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாள்தோறும் சராசரியாக 5250 மெட்ரிக் டன் குப்பை உருவாகிறது. இவற்றில், நாள்தோறும் சராசரியாக 374 மெட்ரிக்டன் எடை கொண்ட மக்கும் கழிவுகளை உரம் தயாரிக்கும் கிடங்குகள், மீத்தேன் எரிவாயு தயரிக்கும் கலன்கள், **BARC** தொழிற்நுட்ப அடிப்படையில் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் கலன்கள், உரக்கிணறுகள், சிண்டக்ஸ் தொட்டிகள், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் காற்றுப்புகும் வரிசையில் உரம் தயாரிக்கும் கிடங்குகள் ஆகியவற்றின் மூலமாக கையாளப்பட்டு மறு சுழற்சி செய்யப்பட்டு வருகிறது. மேலும், இவற்றில் மொத்த திடக்கழிவு உற்பத்தியாளர்களால் (Bulk Waste Generators) நாளொன்றுக்கு சுமார் 425 மெட்ரிக்டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரமாகும் திடக்கழிவுகள், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் படி மொத்த திடக்கழிவு உற்பத்தியாளர்களால் மக்கும் குப்பைகளாக வகை பிரிக்கப்பட்டு அவர்களின் இடத்திலேயே மறு சுழற்சி செய்யப்பட வேண்டும்.

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மொத்த திடக்கழிவு உற்பத்தியாளர்களால் சேகரமாகும் கழிவுகளை கையாள்வது குறித்த கருத்தரங்கம் மற்றும் ஆலோசனை கூட்டம் தேசிய பசுமை தீர்பாய மாநில கண்காணிப்புகுழு தலைவர் மாண்புமிகு நீதியரசர் பி.ஜோதிமணி அவர்கள் தலைமையில் மாநகராட்சி அம்மா மாளிகை அரங்கில் இன்று (10.06.2019) நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.**

இக்கூட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் படி நாளொன்றுக்கு 100 கிலோ குப்பை உற்பத்தி செய்வோர் அல்லது 5000ச.மீபரப்பளவு கொண்ட வளாகத்தின் உரிமையாளர்களான உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், கல்லூரிகள், வணிக வளாகங்கள் மற்றும் குடியிருப்பு வளாகங்கள் போன்ற மொத்த திடக்கழிவு உற்பத்தியாளர்கள் தங்களின் இடங்களில் சேகரமாகும் திடக்கழிவுகளிலிருந்து மக்கும் குப்பைகளை வகை பிரித்து தாங்களே கையாள வேண்டும் என தேசிய பசுமை தீர்பாய மாநில கண்காணிப்புகுழு தலைவர் மாண்புமிகு நீதியரசர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

மேலும், மொத்த திடக்கழிவு உற்பத்தியாளர்களிடம் குப்பைகளை கையாள போதிய இடவசதி இல்லையெனில் அவர்கள் தங்களுக்கு அருகாமையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் உரக்கிடங்கு கூடங்களில் கொண்டு சேர்க்கலாம் எனவும், மொத்த திடக்கழிவு உற்பத்தியாளர்கள் மக்கும் குப்பைகளை கையாளும் போது அவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை களைவது குறித்தும், மக்கும் குப்பையை பல்வேறு விதங்களில் கையாளும் தனியார் நிறுவனங்களிடமிருந்து அவர்களின் வழிமுறைகளை பெற்று அவைகளை கூர்ந்தாய்வு செய்து அவற்றில் சிறந்த வழி முறையை உணவகங்களின் உரிமையாளர்களுக்கு தெரிவிக்கவும் உரிய நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கும் குப்பைகளை பல்வேறு விதங்களில் கையாளும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்று தங்கள் நிறுவனங்கள் மக்கும் குப்பைகளை கையாளுகின்ற முறைகள் குறித்தும், போதிய இடவசதி இல்லாத உணவகங்கள் தங்கள் மக்கும் குப்பையை கையாளும் முறைகள் குறித்தும், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள் தமிழ்நாடு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் மற்றும் குடியிருப்பு சங்க பிரதிநிதிகளுக்கு விளக்கிக் கூறினர்.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ் இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாக இணை ஆணையாளர் திருமதி.கலைசெல்வி மோகன் இ.ஆ.ப., அவர்கள், தலைமை பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை துறை) திரு.என்.மகேசன், மேற்பார்வை பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு ஓட்டல்கள் உரிமையாளர் சங்கம், தங்கும் விடுதிகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**